**வேடசந்தூர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை: முனைவர் K.M.சுமதி ,எம்.ஏ.,பி.எச்.டி., முதல்வர்(மு.கூ.பொ)**

---

**ந.க.எண்:208/அ/2025** **நாள்:17.10.2025**

**பொருள்:** கல்லூரிக் கல்வித்துறை - அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வேடசந்தூர் - கா.கலைவாணி, இளநிலை உதவியாளர் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்டு 30.11.2023 அன்று முற்பகல் பணியில் சேர்ந்தார் -முதல்வர் அளவிலேயே பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டமை - 30.11.2023 மு.ப முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

**பார்வை:**
1. TAMILNADU PUBLIC SERVICE COMMISION MEMORANDUM NO: 453/PSD- B1/2022. DATE: 27.07.2023.
2. கல்லூரிக் கல்வி இயக்குநர் (மு.கூ.பொ) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்:35681/பி1/2023 நாள:27.11.2023.
3. சென்னை 15, கல்லூரிக் கல்வி ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.TNDCE/4777/2025-B1 நாள்: 26.06.2025.
4. இவ்வலுவலக கடித ந.க.எண்.290/அ/2023 நாள்:30.11.2023.

*****

பார்வை (1)ல் காணும் கடிதத்தின் படி, தமிழ்நாடுஅரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தொகுதி -VI மூலம் இளநிலை உதவியாளராக தெரிவு செய்யப்பட்டு பார்வை (2) -ல் காணும் கல்லூரிக் கல்வி இயக்குநர் (மு.கூ.பொ) அவர்களின் செயல்முறைகளின் படி கா. கலைவாணி என்பார் வேடசந்தூர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் பணியிடத்தில் 30.11.2023 மு.ப பணியில் சேர்ந்தார்.

பார்வை(3)ல் காணும் கல்லூரிக் கல்வி ஆணையர் அவர்களின் கடிதத்தில் **“தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்டு பணியில் சேரும் பணியாளர்களுக்கு தேர்வாணையக் கடிதத்தில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு கல்லூரி முதல்வர் அளவிலேயே பணிவரன்முறை செய்து ஆணை வழங்கலாம்”** என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பார்வை(3)ல் காணும் கல்லூரிக் கல்வி ஆணையர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட மேற்காணும் விவரத்தின் அடிப்படையிலும் தனியர் பணியில் சேர்ந்து ஓராண்டு நிறைவு பெற்ற நிலையிலும், இக்கல்லூரியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் கா.கலைவாணி என்பாருக்கு கலம் (4)-ல் குறிப்பிட்ட

நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ.எண் (1) | பெயர் & பதவி (2) | பணியில் சேர்ந்த நாள் (3) | பணிவரன்முறை நாள் (4) |
|---|---|---|---|
| 1 | கா.கலைவாணி<br>இளநிலை உதவியாளர் | 30.11.2023 முற்பகல் | 30.11.2023 முற்பகல் |

(கை.எ.) 17.10.2025

முதல்வர் (மு.கூ.பொ)
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
தண்ணீர்பந்தம்பட்டி.
வேடசந்தூர் - 624 702

**பெறுதல்:**
கா. கலைவாணி,
இளநிலை உதவியாளர்.

**நகல்:**
1. கல்லூரிக் கல்வி ஆணையர்,
   கல்லூரிக் கல்வி இயக்குநரகம், சென்னை-15.
2. பணிப்பதிவேடு

3.உ_பரி